# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

முறையீட்டு மனு எண்: 0064/2017/ந

ஆணை எண்: 156/2017

நாள்: 15/06/2017

திரு. முகவை இரா. ரகுபதி,
அன்னை இல்லம், 15, சித்திரை வீதி,
செந்தில் நகர், திருமுல்லைவாயில்,
சென்னை – 600 062. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
ஆவடி நகராட்சி,
ஆவடி, திருவள்ளூர் மாவட்டம்,
சென்னை – 600 062. – எதிர் மனுதாரர்

முறையீட்டு மனுதாரர் திரு. முகவை இரா. ரகுபதி என்பவரது 27.03.2017 நாளிட்ட முறையீட்டு மனு 28.03.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று எண்.0064/2017 ஆக பதிவு செய்யப்பட்டது.

மேற்படி முறையீட்டு மனுவில் ஆவடி நகராட்சி, திருமுல்லைவாயிலில் 7-வது வார்டு செந்தில் நகர், சித்திரை வீதியில் சாலை அமைக்கப்படாமல் அப்பகுதி முன்னாள் நகர்மன்ற உறுப்பினராலும், நகராட்சி அலுவலர்களாலும் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அங்கீகரிக்கப்படாத மாந்தோப்புகளுக்கும், சந்துகளுக்கும் தார்ச்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதெனவும் ஏற்கெனவே உயர்நீதிமன்றத்தின் கண்டனத்திற்குள்ளான ஏரிபுறம்போக்கு ஆக்கிரமிப்பு நிலங்களில் சிமெண்ட் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதெனவும் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இம்முறையீட்டு மனு குறித்தான பதிலறிக்கையினை தாக்கல் செய்யுமாறு ஆவடி நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவ 30.03.2017 நாளிட்ட அறிவிப்பாணையின் மூலம் ஆணையிடப்பட்டது. மேலும், 16.05.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகி விளக்கமளிக்குமாறு முறையீட்டு மனுதாரருக்கு 17.4.2017 நாளிட்ட அழைப்பாணையும் அனுப்பப்பட்டது. மேற்படி விசாரணை 12.06.2017க்கு ஒத்திவைக்கப்பட்டு 02.05.2017ல் முறையாக அறிவிப்பு அனுப்பப்பட்டது.

12.06.2017 அன்று விசாரணைக்கு ஆஜரான முறையீட்டு மனுதாரர் கீழ்க்கண்டவாறான தனது வாக்குமூலத்தினை சமர்ப்பித்துள்ளார்:–

"செந்தில் நகர் சித்திரை வீதி முழுவதும் ஆவடி பெருநகராட்சியால் புறக்கணிக்கப்படுகிறது, பாகுபாடு காட்டப்படுகிறது. பிற பகுதிகளில் சாலை அமைக்கும் பணி முறையாக நடைபெற்றாலும் எங்களது வார்டில் எங்களது பகுதியான சித்திரை வீதி முழுவதும் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. கடந்த 2003ஆம் ஆண்டு முதல் 11வது வார்டு சித்திரை வீதி தொகுதி மட்டும் சாலை போடப்படாமலும் இருந்த பாதை செப்பனிடப்படாமலும் முழுவதும் புறக்கணிக்கப்பட்டு வருகிறது.

நகராட்சி ஆணையர் திரு.மதிவாணன் அவர்களிடம் சங்கம் சார்பிலும், தனிப்பட்ட முறையிலும் இந்த சாலை அமைக்கும் விஷயத்தில் 5,6 முறை பார்த்து கோரிக்கை வைக்கப்பட்டது. நகராட்சிக்கு சம்பந்தமில்லாத இடங்களிலும், மாந்தோப்புகளிலும், ஏரி உட்புறத்திலும், தேவையில்லாத ரோடு போடக் கூடாத இடங்களிலும் நகராட்சி தீர்மானம் இல்லாமலும் பல இடங்களில் சாலை அமைத்துள்ளார்கள். நியாயமான கோரிக்கையை செயல்படுத்தவில்லை..."

மேற்படி வாக்குமூலத்துடன் கீழ்க்கண்டுள்ள ஆவணங்கள் ஆதாரங்களாக சமர்ப்பிக்கப்பட்டன.

(i) அங்கீகரிக்கப்பட்ட பகுதியில் அடங்கியுள்ள 45 தெருக்களின் பட்டியல் (வரைபடத்துடன்)

(ii) சித்திரை வீதி சாலை போடப்படாததற்கான ஆதார புகைப்படங்கள்.

(iii) அங்கீகரிக்கப்படாத, பட்டியலில் இல்லாத தர்மலிங்கம் தெரு (மாந்தோப்பு) பகுதிக்கு சாலை அமைந்துள்ளது. புகைப்படம்.

(iv) தனபால் தெரு (மாந்தோப்பு) பகுதிக்கு சாலை போடப்பட்டுள்ளதற்கான புகைப்படம்

(v) கமலம்மாள் தோட்டம் பகுதிக்கு சாலை அமைத்துள்ளமைக்கான புகைப்படம்

(vi) கிருஷ்ணா தோட்டம் பகுதிக்கு சாலை போட்டுள்ளதற்கான புகைப்படம்.

(vii) ஏரி உள் வாயிலில் சிமெண்ட் சாலை அமைத்துள்ளதற்கான புகைப்படம்.

மேற்படி புகார்களின் அடிப்படையில் பொது நலன் கருதி ஆவடி நகராட்சி ஆணையர் 14.06.2017 அன்று உடனடியாக இம்முறைமன்ற நடுவத்திற்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

விசாரணையின் போது மனுதாரர் குறிப்பிட்டுள்ள சித்திரை வீதி பகுதியில் 15 ஆண்டுகளாக முறையான, நிரந்தரமான சாலை அமைக்கப்படவில்லை என உறுதி செய்யப்பட்டது. மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள தெருவிற்கு சாலை அமைப்பது குறித்து மிக விரைவில், விதிகளின்படி உரிய கால அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரி சாலை அமைக்கப்படும் என நகராட்சி ஆணையரால் வாக்குமூலம் அளிக்கப்பட்டது.

இருப்பினும், ஒரு குறிப்பிட்ட பகுதியினை சாலை வசதிகள் வழங்காமல் புறக்கணித்திருப்பது ஒரு ஜனநாயக அமைப்பில் நடந்திருப்பது எவ்வகையிலும் பெருமை தரக்கூடியது அல்ல என இம்முறைமன்ற நடுவம் பதிவு செய்கிறது. மனுவில் குறிப்பிட்டுள்ள சித்திரை வீதி பகுதிக்கான சாலை வசதியினை முறையே விதிகளின்படி உரிய நடைமுறைகள் மற்றும் விதிமுறைகளை பின்பற்றி அமைத்து தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும், புகாரில் குறிப்பிட்டுள்ள அங்கீகரிக்கப்படாத, முறையாக நகராட்சியின் வரையறைக்குள் தானப் பத்திரம் மூலம் கொண்டு வரப்படாத, அபிவிருத்திக் கட்டணம் வசூலிக்கப்படாத பகுதிகளுக்கு அமைக்கப்பட்டுள்ள சாலை மற்றும் பிற நகராட்சி பணிகளுக்கான திட்ட மதிப்பீடு மற்றும் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் உரிய ஆவண நகல்களுடன் இம்முறைமன்ற நடுவத்தில் ஆவடி நகராட்சி ஆணையரால் தாக்கல் செய்யப்பட வேண்டுமெனவும் இது குறித்து தனியே உரிய விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 15-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

**பெறுநர்**

1) நகராட்சி ஆணையர்,
   ஆவடி நகராட்சி,
   ஆவடி, சென்னை – 600 062.
2) திரு. முகவை இரா. இரகுபதி,
   15, சித்திரை வீதி, (அன்னை இல்லம்)
   செந்தில் நகர், திருமுல்லைவாயில், சென்னை – 600 062.